முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1428

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**27.08.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. திக்கெட்டும் பரவட்டும் அரங்கன் புகழ்
   தெய்வீகம் மலரட்டும் அரங்கன் வழிகாட்டலில்
   எத்திக்கும் அரங்கன் தொண்டர்களாலே
   இந்த பேருலகம் ஞானலோகமாகட்டும்
2. ஆகட்டும் எனக்கூறி ஆறுமுகன் யான்
   அருளுவேன் அரங்கனுக்கு ஞானஅறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆவணி மாதம் 10ம் நாள், 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை)
   யுகமாற்றம் புரிவதே தன்தவபலமாக
   உயர்வான கொள்கைகொண்டு அவதாரம்எடுத்த
3. எடுத்தநல் அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   இன்னவரை உலகோர்கள் நாடிவந்து
   தடையற தொடர்ந்து வணங்கி நன்கு
   தர்மவழி துணைநின்று தொடரத்தொடர
4. தொடருகின்ற மாந்தர்கட்கு துன்பமில்லை
   தொடருகின்ற மாந்தர்கட்கு இன்பங்கூடி
   இடர்களென்பதே இல்லாத வண்ணமாக
   எல்லா சித்திகளும் தானாய் கிட்டும்
5. கிட்டவே ஆறுமுகன் அரங்கன்வழி
   குறையில்லா தீட்சையாக உலகோர்க்கு
   தட்டாது தொடர்ந்துஆசி வழங்கிவர
   தவராஜன் தொடர்பே உலகோர்க்கு மாற்றந்தரும்
6. மாற்றந்தர அரங்கன் வகுத்தநல்
   மார்க்கமாம் சன்மார்க்க நெறியே
   ஆற்றல்பட உலகெலாம் பரவிநின்றால் அகிலத்தில் அற்புதம் நிகழக்கூடும்
   அரங்கனை கொண்டு ஆறுமுகன்யான் உலகமாற்றம் நடத்தக் கூடும்

7. கூடவே அரங்கன்வழி உலகோர் வர
குருபலமாய் அனைவரும் நாளும்தேறி ஈடேற்றம் காண்பரப்பா
இலகுவாய் இனி இயம்பிய ஆறுமுகன்என்
ஞானஅறிவுரை ஆசி விளக்கம் முற்றே

–சுபம்–